**Spl.S.C.No.**11/2023 **PW** 15 – சஷ்மிதா 23.07.2025

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)**

**M.P.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் 3.40 மணி**

எனக்கு பி.பி.ஏ. இரண்டாம் வகுப்பு படிக்கும்போதுதான் திருமணம் நடைபெற்றது. எனது திருமணம் காதம் திருமணம். நான் நாடார் வகுப்பை சார்ந்தவர். எனது கணவர் பட்டியல் இனத்தை சார்ந்தவர். எனது கணவர் ஏதும் படிக்கவில்லை. எதிரி கோகுலகிருஷ்ணன் (தாய்வழக்கு எண்ணில் உள்ள எதிரி) எங்கள் கல்லூரியில் பி.காம் படித்தார். எதிரி கோகுலகிருஷ்ணனை படிக்கும் காலத்திலேயே தெரியும். மற்ற எதிரிகள் உங்கள் கணவரை வெட்ட வந்தபோதுதான் பார்த்துள்ளீர்கள் என்றால் சரிதான், பிரேம் என்பவர் எங்கள் தெருவிற்கு பக்கத்து தெருவில் குடியிருப்பவர். பிரேம்குமாரை சம்பவத்திற்கு முன்பே அவர் பெயர், எங்கு குடியுள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். என் திருமணத்திற்கு என் வீட்டில் சம்மதம் தெரிவித்தார்கள். ஜனவரி 2020 ஆம் ஆண்டில் எனக்கு திருமணம் நடைபெற்றது. திருமணத்தை நான் பதிவு செய்துகொள்ளவில்லை. என் கணவரின் சித்தி மற்றும் என் தாயார், என் கணவரின் உடன் பிறந்த சகோதரர் பெரியசாமி ஆகியோர்கள் முன்னிலையில்

பாலமலை முருகன் கோவிலில் திருமணம் நடைபெற்றது. என் தகப்பனார் இருக்கிறார். இளநீர் எனக்கு வெட்ட தெரியாது. சம்பவ தினத்தன்று மட்டும் என் மாமனார், மாமியார் பொள்ளாச்சிக்கு இளநீர் எடுக்க சென்றுவிட்டார், ஆகையால் நானும், எனது கணவரும் கடைக்கு போனோம். மாமனார், மாமியார் எப்போது கடைக்கு போகசொன்னார்கள் என்றால் சம்பவ தினத்திற்கு முந்தைய நாள் சொன்னார்கள். மாலை 6-6.30 மணி இருக்கும். என் கணவர் இருசக்கர வாகனம் வைத்துள்ளார். சம்பவ தினத்தன்று நீங்கள் இரு சக்கர வாகனத்தில்தான் சென்றீர்கள் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்தை இளநீர் கடைக்கு பின்புறம் நிறுத்தியிருந்தோம். உங்கள் கணவர் பைக்ரேஸ் மற்றும் சேவல் சண்டைக்கு செல்வரா என்றால் இல்லை. பெரியசாமி செல்வரா என்று எனக்கு தெரியாது. இளநீர் கடை திறந்தவெளியில்தான் உள்ளது. அந்த கடையை என் மாமனார், மாமியார்தான் பார்த்துக் கொள்வார்கள். எனக்கு இளநீர் வியாபாரம் பற்றி எதுவும் தெரியாது. சம்பவ தினத்தன்று இளநீர் கடைக்கு உங்கள் மாமியார், மாமனார் சொல்லிதான் சென்றீர்களா என்றால் மாமனார், மாமியார் எனது கணவருடன் செல்ல சொன்னார், ஆகையால் நானும் அவருடன் சென்றேன். என் வீட்டிலிருந்து கடைக்கு எவ்வளவு துாரம் என்றால் பைக்கில் சென்றால் 5 நிமிடத்தில் சென்றுவிடலாம். நடந்து போனால் 20 நிமிடம் ஆகும். காலையில் நான் 7.45 மணிக்கு நானும், எனது கணவரும் இளநீர் கடைக்கு சென்றோம்.

சம்பவம் நடக்கும்போது காலை 8 மணி இருக்கும். நீங்கல் அப்பல்லோ மருத்துவமனைக்கு செல்லும்போது எத்தனை மணி இருக்கும் என்றால் 8.30-8.45 மணி இருக்கும். உங்கள் கடைக்கும், காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ரொம்ப தூரம் இருக்கும். அப்பல்லோ மருத்துவமனையில் இருக்கும்போது காவல் துறையினர் 5 நிமிடத்தில் வந்திருப்பார்கள். காவல் துறையினர் என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். அந்த வாக்குமூலத்தை நீங்கள் படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தீர்கள் என்றால் சரிதான். அதன்பிறகு காவல் துறையினர் எங்கு வைத்து, எப்போது விசாரித்தீர்கள் என்றால் மருத்துவமனை கல்லூாரியில் என்னை காவல்துறையினர் அன்றைய தினமே விசாரித்தார்கள். அப்போது 9.30 – 10 மணி இருக்கும். நான் என் கணவரை இழந்ததற்காக SC, ST சட்டப்பிரிவின் கீழ் வேலை வழங்கவேண்டும் என்றும், நஷ்டஈடும், வேலை வழங்கவேண்டும் என்று விண்ணப்பமும் செய்தேன் என்றால் சரிதான். இதுநாள் வரை எனக்கு நஷ்டஈடும், வேலையும் கிடைக்கவில்லை. FIR ஐ நான் படித்துப்பார்த்தேன். முதல் தகவல் அறிக்கையின் பிரதியை என்னிடம் கொடுத்து காவல் துறையினர் கையொப்பம் பெற்றுக்கொண்டார்கள். உங்கள் பெற்றோர்கள் சம்மதத்துடன் திருமணம் செய்து கொண்டதாக கூறுவது பொய் என்றும், மற்றும் உங்கள் இனத்தோரும் உங்களுடைய காதம் திருமணத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்றும், உங்கள்

கணவர் மீது அவர்கள் விரோதமாக இருந்தார்கள் என்றும், நீங்கள் அதனை மறைக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 17 ஆம் தேதி நடந்த சம்பவம் உங்களுக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் என் கணவர் சொல்லிதான் தெரியும். உங்கள் கணவர் எதுவும் உங்களிடம் கூறவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக கூறுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கொடுத்த புகாரை அ.த.சா.ஆ.2. ஐ நான்தான் கைப்பட எழுதினேன். 17.09.2020 ஆம் தேதி இரவு சுமார் 8.45 மணியளவில் என் கணவர் டீச்சர்ஸ் காலணி வழியாக இளநீர் கடைக்கு வந்தபோது கோகுல் மற்றும் அவரது நண்பர்கள் பிரேம்குமார், அஜித்குமார் ஆகியோர்கள் கோகுல் வீட்டின் அருகே என் கணவர் கிருஷ்ணமூர்த்தியிடம் தகராறு செய்துள்ளார்கள் என்று எழுதியுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 18 ஆம் தேதி நடந்த சம்பவத்தை பற்றியும் நான் குறிப்பிட்டுள்ளேன். அஜித்குமாரை சம்பவத்திற்கு முன்பாகவே எனக்கு தெரியும். அஜித்குமார் பட்டியல் இனத்தை சார்ந்தவர் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் பட்டியல் இனத்தவர் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு மற்றும் மருத்துவமனையில் விசாரித்தபிறகு உங்களை அதன்பிறகு எப்போது விசாரித்தார்கள் என்றால் இருமுறை என்னை விசாரித்தார்கள், அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. துரைப்பாண்டி எந்த வகுப்பை சார்ந்தவர் என்று எனக்கு தெரியாது. நீங்கள் உங்கள்

இனத்தவரை காப்பாற்றவேண்டி புகார் அளித்தீர்கள் என்றும், அதன் பின்பு பட்டியல் இனத்தை சார்ந்த முக்கியதஸ்தர்கள் தலையீட்டால் அஜித்குமார் என்பவரை நீக்கிவிட்டு அந்த இடத்தில் பட்டியல் இனத்தை சேராத மரவர் இனத்தை சேர்ந்த 2 ஆம் எதிரியை நுழைத்து சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. பிரேம் என்ன ஜாதியை சார்ந்தவர் என்று தெரியுமா என்றால் தெரியாது. பிரேம் கள்ளர் இனத்தை சார்ந்தவர் என்பது உங்களுக்கு தெரியும் என்றும், பின்னிட்டு அவர் பெயரை சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. சம்பவத்தினத்தன்று சம்பவத்திற்கு முன்பாக மூன்று இளநீர் வெட்டி வியாபாரம் செய்யப்பட்டது. இளநீர் வெட்டுவதற்கு அருவாள் வேண்டும் என்று சொன்னால் சரிதான். கடையில் இரண்டு அருவாள் உண்டு. கடையில் வியாபாரம் முடித்து என் கணவர் உட்கார்ந்து இருக்கும்போதுதான் சம்பவம் நடந்தது. உங்கள் கணவர் உட்கார்ந்து இடத்திற்கு அருகில்தான் அருவாள் இருந்தது என்று சொன்னால் சரியல்ல, என் கணவர் உட்கார்ந்த இடத்தில் இருந்து இரண்டு அடி எடுத்து வைத்தால்தான் அருவாள் எடுக்க முடியும். சம்பவம் நடக்கும்போது உங்கள் கணவர் அருவாளை எடுத்து தன்னை காத்துக்கொள்ள முயற்சி செய்தாரா என்றால் இல்லை. சம்பவத்திற்கு பிறகு நான் கடைக்கு வரவில்லை. அருவாள் அனைத்தும் சம்பவத்திற்கு பிறகு என்ன ஆனது என்று தெரியுமா என்றால் அதையெல்லாம் அத்தையும், மாமாவும்தான் பார்த்துக் கொள்வார்கள்.

உங்கள் மாமனார், மாமியார் சொல்லி சம்பவயிடத்திற்கு நீங்கள் செல்லவில்லை என்றும், நீங்கள் பின்னிட்டு தகவல் கிடைத்துதான் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றுள்ளீர்கள் என்றும், அதன் பிறகுதான் நீங்கள் சம்பவத்தை குறித்து மற்றவர்கள் துாண்டுதலின்பேரில் புகார் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. அப்பல்லோ மருத்துவமனையில் உள்ள மருத்துவர்கள் என்னை விசாரிக்கவில்லை. நான் மருத்துவர் கிட்ட போகவில்லை, பெரியசாமியும், பிரவீனும் (அ.சா.16, அ.சா.17) பார்த்துக் கொண்டார்கள். அப்பல்லோ மருத்துவமனையில் அரை மணிநேரம் இருந்திருப்போம். அப்பல்லோ மருத்துவமனைக்கும், அரசு மருத்துவமனைக்கும் அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம். அரசு மருத்துவமனையில் நீங்கள்தான் அனுமதித்தீர்கள் என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் என்னை எதுவும் கேட்கவில்லை. அரசு மருத்துவமனையில் மருத்தவர் கேட்டபோது சிலர் தெரியாத நபர்கள் வெட்டிவிட்டார்கள் என்று கூறியுள்ளீர்களா என்றால் நான் எதுவும் சொல்லவில்லை, மேற்சொன்ன அ.சா.16 பெரியசாமி மற்றும் அ.சா.17 பிரவீன் அவர்கள்தான் சொன்னார்கள். கரூரில் உள்ள சேலம் பை பாஸ் ரவுண்டானா தெரியுமா என்றால் தெரியும். 3 நிமிடங்களில் சேலம் பை பாஸ் ரவுண்டானாவில் இருந்து எங்கள் கடைக்கு செல்லலாம். என் கணவரை நான் மடியில் எடுத்து வைத்ததால் ரத்தம் ஏற்பட்டதா என்றால் என் உடையில்

ரத்தம் ஏற்பட்டது. காவல் துறையினர் நான் சம்பவத்தன்று அணிந்திருந்த ஆடையினை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டார்கள். நீங்கள் கொடுத்த புகாரில் இரண்டு சக்கர வாகனம் பயன்படுத்தியதாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரிதான். 18.09.2020 அன்று சம்பவத்தின்போது பிரேம்குமார் வந்ததாகவோ, எந்த செயல்களிலும் ஈடுபட்டதாக சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். பிரேம்குமாருக்கும், 18 ஆம் தேதி நடந்த சம்பவத்திற்கும் எந்தவிதமான சம்மந்தமும் இல்லையென்றும், பின்னிட்டு அவரது பெயர் இந்த வழக்கில் நுழைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் முதல் முதல் விசாரித்தபோது சாட்சி பிரவீன் பற்றி நீங்கள் கூறவில்லை என்றும், அதேபோல் புகாரிலோ, முதல் தகவல் அறிக்கையிலோ சாட்சி பிரவீன் பெயர் இல்லை என்றால் சரியல்ல. படியில் இறங்கும்போது எதிரி பிரேம்குமார் என்பவர் அவர்கள் இருவரையும் பார்த்து அவனுக்கு இன்னும் உயிர் மீதி இருக்கிறது என்றும், அவனை வெட்டுங்கடா என்றும், பின்னர் கோகுலும், துரைபாண்டியை என் கணவரை படியில் இழுத்துப்போட்டு வெட்டிவிட்டு அவர்கள் இருவரும் மணிகண்டனின் Duke இருசக்கர வாகனத்தில் ஏறி சென்றுவிட்டதாகவோ இவ்வாறு நீங்கள் கொடுத்த புகாரிலோ, அல்லது நீங்கள் காவல் துறையில் கொடுத்த வாக்குமூலத்திலோ, தாய்வழக்கான **SC**.**No**.17/2021 லோ அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் சொன்னபடி,

சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றும், உங்களுக்கு எப்படி நடந்தது என்ன நடந்தது என்று தெரியாது என்றும், பின்னிட்டு சொல்லிக்கொடுத்து உங்களை சாட்சியாக போட்டு சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**முடித்த நேரம் 4.35 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**<u>Spl.S.C.No.11/2023 PW 16 – பெரியசாமி 23.07.2025</u>**

**(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)**

**<u>M.P.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>ஆரம்பித்த நேரம் 4.35 மணி</u>**

நான் கரூர் - கோயமுத்துார் பை பாஸ் ரோட்டில்கரும்பு ஜீஸ் கடை நடத்தி வருகிறேன். இளநீர் கடையை ஒட்டிதான் என்னுடைய கரும்பு ஜீஸ் கடை உள்ளது. எங்கள் கடைக்கும், வீட்டிற்கும் சுமார் 1 1/2 கி.மீ., துாரம் இருக்கும். இளநீர் கடைக்கும், என்னுடைய கடைக்கும் 50 அடி துாரம் இடைவெளி சுமார் இருக்கும். என்னுடைய வருமானமே ஜீஸ் கடைதான். சம்பவ தினத்தன்று இளநீர் கடைக்கு என் தாய், தந்தையர் கூறிதான் நான் சென்றேன். இளநீர் கடை திறந்தவெளியில்தான் உள்ளது. அதற்கு கட்டிடமோ, கதவோ, பூட்டோ எதுவும் இல்லை. நான் சம்பவ தினத்தன்று இளநீர் கடைக்கு சென்றபோது கிருஷ்ணமூர்த்தி இளநீர் வியாபாரம் செய்தார். கடையில் வியாபாரம் செய்தார் என்றால் சேரில் உட்கார்ந்து கிருஷ்ணமூர்த்தி மொபைல்போன் பார்த்துக்கொண்டிருந்தார். தாக்கும்போது கிருஷ்ணமூர்த்தி மொபைல்போனை அங்கேயே விட்டுவிட்டாரா என்றால் அதனை நான் சரியாக பார்க்கவில்லை. அதன் பிறகு மொபைல்போனுக்கு என்ன ஆனது

என்றால் காவல் துறையினர் கொடுத்தார்கள் என்று நினைக்கிறேன். கிருஷ்ணமூர்த்தி இருசக்கர வாகனம் வைத்துள்ளார். சம்பவதினத்தன்று கிருஷ்ணமூர்த்தி இருசக்கர வாகனத்தை எங்கு நிறுத்தியிருந்தார் என்றால் கடைக்கு வலதுபுறம் நிறுத்தியிருந்தார். கிருஷ்ணமூர்த்தியை ஆம்புலன்சில் எடுத்து சென்றோம், அந்த சமயத் கிருஷ்ணமூர்த்தியின் இருசக்கர வாகனம் அங்கேயேதான் இருந்தது, அது என்ன ஆனது என்று எனக்கு தெரியாது. உங்களையும், பிரவீன்குமார் தம்பியையும் எதற்கு உங்கள் பெற்றோர்கள் இளநீர் கடைக்கு அனுப்பினார்கள் என்றால் அவர்கள் இளநீர் வாங்க சென்றதால் ஒன்றாக உட்கார்ந்து வியாபாரம் செய்யுங்கள் என்று அனுப்பினார்கள். இளநீர் கடையில் இளநீர் விற்பது தவிர வேறு வேலை இல்லை. சம்பவ தினத்தன்று நான் இளநீர் வெட்டவில்லை. இளநீர் கடையில் இளநீர் வெட்டுவதற்காக இரண்டு அருவாள் இருந்தது. சம்பவம் நடக்கும்போது நீங்களோ, கிருஷ்ணமூர்த்தியோ தற்காப்புக்காக அந்த அருவாளை எடுத்து பயன்படுத்துனீர்களா என்றால் இல்லை. சம்பவம் ஆரம்பத்தில் இருந்து முடியும் வரை கடையில் இளநீர் வெட்டும் இடத்தில்தான் இருந்தேன். அப்போது உங்கள் வண்டி எங்கு நின்று கொண்டிருந்தது என்றால் கடைக்கு பக்கத்தில்தான் நின்று கொண்டிருந்தது. உங்கள் தம்பிக்கு காயம் பட்டவுடன் உங்கள் தம்பியை தூக்கினீர்களா என்றால் தூக்கினேன். அவ்வாறு தூக்கும்போது உங்கள் உடையில் ரத்தம்

ஆனதா என்றால் ரத்தம் ஆனது. ரத்தம் படிந்த ஆடையை காவல் துறையினர் பார்த்தார்கள், ஆனால் அந்த உடையை காவல் துறையினர்வாங்கவில்லை. நான் ஆம்புலன்சில் ஏற்றிவிட்டு ஆம்புலன்ஸ் உடன் செல்லவில்லை, பைக்கில் சென்றேன். ஆம்புலன்ச்சில் இருந்து கிருஷ்ணமூர்த்தியை நீங்கள் மற்றும் உங்கள் ஊர்க்காரர்கள் அனைவரும்தான் இறக்கிவிட்டீர்கள் என்றால் ஊர்க்காரர்கள் யாரும் வரவில்லை, மருத்துவமனையில் இருந்த நர்ஸ்கள்தான் எடுத்து சென்றார்கள். நான் மருத்துவரிடம் சென்றேன். மருத்துவர் என்னை கேட்டு எதுவும் எழுதவில்லை. பிரவீன் மருத்தவர் பார்க்கும்போது கூட இருந்தாரா என்றால் அப்போது கூட்டமாக இருந்தது. அந்த கூட்டத்தில் எங்கள் ஊர்க்காரர்கள் யாரும் இல்லை. தாய்வழக்கில் Sc.No.17/2021 விசாரித்தபோது மருத்துவர் சம்பவம் எப்படி நடந்தது என்று என்னை விசாரித்தார் என்றும், அப்போது நான் அங்கு இருந்தேன், அ.சா.1 (சஷ்மிதா) உடன் இருந்தார், மருத்தவர் கேட்டவுடன் நாங்கள் ஆள் ஆளுக்கு சொன்னோம், தம்பி பிரவீனும் அங்கு இருந்தார், அ.சா.1 (சஷ்மிதா) ம் ஆள் ஆளுக்கு ஒன்று சொன்னோம் என்று கூறியுள்ளீர்களா என்றால் மருத்துவரிடம் எதுவும் சொல்லவில்லை. நீங்கள் குற்றவியல் நடுவர் எண்.2, கரூரில் வாக்குமூலம் பதிவு செய்யும்போது இவ்வாறு "மறுநாள் காலையில் எனது பெற்றோர்கள் இளநீர் கடைக்கு வரச்சொன்னார்கள்" என்று கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். நீங்கள் கூறியவாறு கடைக்கு செல்லவில்லை

என்றும், சம்பவத்தை பற்றி தெரியாது என்றும், நீங்கள் கூறியவாறு சொன்ன இடத்தில், சொன்ன நேரத்தில், சம்பவம் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. காவல் துறையினர் உங்களை எப்போது எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்று அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். காவல் துறையினர் உங்களை விசாரித்தபோது பிரேம்குமார் என்பவர் சம்பவம் நடந்தபோது அந்த இடத்தில் இருசக்கர வாகனத்தில் தனியாக நின்று கொண்டிருந்தார் என்றும், பிரேம்குமார் அவன் இன்னும் சாகவில்லை, இன்னும் வெட்டுங்கள் என்று சொன்னார் என்றும், அவர் சொன்னவுடன் என் தம்பியை மாறி மாறி வெட்டினார்கள் என்றும், அதன் பிறகு அங்கிருந்து சென்றுவிட்டார்கள், நாங்கள் அவர்களை பிடிப்பதற்கு பைக்கை எடுத்து விரட்டினோம், பிடிக்க முடியவில்லை என்று கூறினீர்களா என்றால் என்று கூறியுள்ளேன். நீங்கள் தாய்வழக்கில் SC.No.17/2021 என்ற வழக்கில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் அவ்வாறு சொல்லவில்லை என்றும், சாட்சியம் வேண்டும் என்பதற்காக உங்களை சாட்சியாக போட்டு உறவின்முறையில் சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நானும், என் சகோதரர்களும் பைக்ரேஸ் மற்றும் கோழி சண்டைக்கு செல்வீர்களா என்றால் செல்வோம்.

<u>**முடித்த நேரம் 5.00 மணி**</u>

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.

<u>**Spl.S.C.No**.11/2023 **PW** 17 – பிரவீன் 23.07.2025</u>

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

<u>**M.P**.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

<u>ஆரம்பித்த நேரம் 5.00 மணி</u>

நான், என் சகோதரர்கள் பைக்ரேஸ் மற்றும் சேவல் சண்டைக்கு செல்வீர்களா என்றால் இல்லை. சம்பவ சமயத்தில் நீங்கள் என்ன வேலைக்கு சென்றீர்கள் என்றால் ஆஸ்பெட்டாஸ் ஷீட் போடும் வேலை செய்தேன். காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை வேலை செய்வேன். நான் பட்டறையில்தான் வேலை செய்தேன். வேலை செய்துதான் சாப்பிடவேண்டும். சம்பவத்தன்று வேலைக்கு செல்லவில்லை. காவல் துறையினர் நீங்கள் எங்கு வேலைக்கு சென்றீர்கள், யாரிடம் வேலைக்கு செல்கிறீர்கள் என்று காவல் துறையினர் கேட்டார்களா என்றால் இல்லை. நீங்கள் சம்பவதினத்தன்று எத்தனை மணிக்கு இளநீர் கடைக்கு சென்றீர்கள் என்றால் காலை 8.30 மணிக்கு மேல் சென்றேன். இளநீர் கடை பிளாட்பாரத்தில் உள்ளது என்றால் சரிதான். பிளாட்பாரத்தை ஒட்டி கடைகள் உள்ளது, வீடுகள் இல்லை. கடைகள் எல்லாம் பெரிய பெரிய கட்டிடத்தில் உள்ளது, அது உள்ளே தள்ளி உள்ளது. கடைக்குள் செல்வதற்கு படிக்கட்டுகள்

உள்ளது என்றால் சரிதான். கடைகள் பிளாட்பாரத்தை ஒட்டியும் உள்ளது, தள்ளியும் உள்ளது. உங்கள் இளநீர் கடைக்கு பக்கத்தில் மற்றொரு இளநீர் கடை உள்ளது. எங்கள் கடைக்கு பக்கத்தில் உள்ள இளநீர் கடையை தள்ளி 50 மீ தள்ளி கடைகள் உள்ளது. அந்த கடைக்கு பிரதான சாலையை நோக்கி படிக்கட்டு உள்ளதா என்றால் உள்ளது. படிக்கட்டில் இளநீர் வைத்திருந்தார்களா என்றால் இல்லை. படிக்கட்டில் சம்பவம் நடைபெறவில்லை. நீங்கள் இளநீர் வெட்டுவதற்காக கடைக்கு செல்லவில்லை என்று சொன்னால் நான் கடையை பார்த்துக்க சென்றேன். 17 ஆம் தேதி நீங்கள் கடையை பார்க்க சென்றீர்களா என்றால் ஆமாம், கடையை பார்க்க சென்றேன். கடை பூட்டி இருக்கிறதா, திறந்து இருக்கிறதா என்பதை பார்ப்பதற்காக சென்றீர்களா என்றால் ஆமாம். பிரேம்குமாரை சம்பவத்திற்கு முன்பு தெரியுமா என்றால் நன்றாக தெரியும். பிரேம்குமார் பெயர் தெரியும், அவர் ஜாதி தெரியாது. அவருக்கும், எனக்கும் எந்தவித சம்மந்தமும் கிடையாது, அவரிடம் நான் பேசியது கிடையாது. பிரேம்குமார் தெருவில் வரும்போதும், போகும்போதும் பார்த்துள்ளீர்களா என்றால் சரிதான். எங்கள் தெருவில் நிறைய நபர்கள் வந்து செல்வார்கள். உங்களுக்கு பிரேம்குமாரை தெரியாது என்றும், நீங்கள் சொன்னபடி 17 ஆம் தேதி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், அதேபோல் நீங்கள் 18 ஆம் தேதியும் கடையை பார்த்து வரலாம் என்று செல்லவில்லை என்றும், நான் போகவில்லை என்றும்,

18 ஆம் தேதி சம்பவம் எப்படி நடந்தது, உங்கள் அண்ணன் கிருஷ்ணமூர்த்திக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்றும், நீங்கள் கூறியபடி எதுவும் நடக்கவில்லை என்றும், காவல் துறையினர் கூறியதுபோல் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. உங்களை காவல் துறையினர் விசாரித்தபோதும், நீதிமன்றத்தில் உங்கள் வாக்குமூலத்தை பதிவு செய்யும்போதும், தாய்வழக்கில் SC.No.17/2021 என்ற வழக்கிலும் "சாகவில்லை, சாகவில்லை வெட்டுங்கடா என்றும், சாகும்வரை வெட்டுங்கடா என்று பிரேம்குமார் கூறினார் என்றும், பின்னர் கீழே வந்து கோகுலும், துரைப்பாண்டியும், என் அண்ணன் கிருஷ்ணமூர்த்தியை மீண்டும் வெட்டினார்கள் என்றும், அதன் பின்னர் வண்டியில் சென்றுவிட்டார்கள் என்று கூறவில்லை" என்று சொன்னால் சரியல்ல.

**<u>முடித்த நேரம் 5.15 மணி</u>**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No.**11/2023 **PW** 19 – குணசேகரன் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.**1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பித்த நேரம் 5.15 மணி

தாய்வழக்கான SC.No.17/2021 ல் நீங்கள் சாட்சியம் அளிக்கும்போது விசாரித்தபோது "என் மகன் கிருஷ்ணமூர்த்தி அவர் இறப்பதற்கு முந்தைய நாள் என்னிடம் சொன்னார் என்றும், மறுநாள் நான் என் மகன் கிருஷ்ணமூர்ததியும், அவரது மனைவியையும் இளநீர் கடையில்விட்டுவிட்டு நானும், என் மனைவியும் பொள்ளாட்சிக்கு சென்றோம் என்று கூறினீர்களா என்றால் சரிதான். நீங்கள் சொன்னபடி எதுவும் இல்லை, சொல்லிக்கொடுத்து சொல்லுகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

முடியும் நேரம் 5.20 மணி வரை

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No.**11/2023 **PW** 24–வினோத்கண்ணன் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.**1/2025ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பித்த நேரம் 5.20 மணி

காயமடைந்த நபர் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர விருப்பம் இல்லாததால் புறநோயாளியாக சிகிச்சையளித்தேன் என்றும், பின்னிட்டு ஆவணங்கள் மறைக்கப்பட்டு, காவல்துறையினர் சொல்லிக்கொடுத்து சொல்லியிருக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தவறான ஆவணங்கள் தயாரித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

முடித்த நேரம் 5.25 மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No.**11/2023 **PW** 20 – ரஞ்சிதம் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.**1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பித்த நேரம் 5.25 மணி

கிருஷ்ணமூர்த்தியிடம் செல்போன் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் செல்போன் உள்ளது. என் மருமகளிடம் செல்போன் உள்ளது. உங்கள் மருமகள் போன் பண்ணிதான் தகவல் தெரியும் என்று சொன்னால் சரிதான். காவல்துறையினர் போன் நம்பர்களை வாங்கிவிட்டார்கள் என்றால் சரிதான். உங்கள் மகன் இறப்பதற்கு முன்பாக பிரச்சனை இருப்பதாக கூறுவது பொய் என்று சொன்னால் சரியல்ல.

முடித்த நேரம் 5.26 மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No**.11/2023 **PW** 26 – கார்த்திக் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P**.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பித்த நேரம் 5.26 மணி

நீங்கள் பிரவீன்குமார் அழைத்ததன்பேரில்தான் சென்றீர்கள் என்றால் சரிதான். அதைத்தவிர எனக்கு வேறு வேலை இல்லை. நான் சென்று பார்க்கும்போது இளநீர் கடை பூட்டி இருந்தது. இளநீர் கடை சரியாக சாத்தி இருந்தா என்று பார்க்கசென்றேன். நீங்கள் இருசக்கர வாகனத்தில் சென்றீர்கள் என்றால் சரிதான். பிரவீன் இருசக்கர வாகனத்தை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து சென்றேன். கேட்டுக்கொண்டே சென்றோம் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கூறியதுபோல் எதுவும் நடக்கவில்லை என்றும், சொல்லிக்கொடுத்து, உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

முடித்த நேரம் 5.30 மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**<u>Spl.S.C.No.11/2023 PW 27 – பிரகாஷ் 23.07.2025</u>**

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**<u>M.P.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>ஆரம்பித்த நேரம் 5.30 மணி</u>**

காவல் நிலையத்தில் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்த காரில் சாவி இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நீங்கள் கூறுவதுபோல் எந்தவொரு வாக்குமூலம் பெறவில்லை என்றும், பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் காவல் துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**<u>முடித்த நேரம் 5.32 மணி</u>**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No.**11/2023 **PW** 28 – அங்குராஜ் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.**1/2025 ல் 14.07.2025 **அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் 5.32 மணி**

நீங்கள் கூறியதுபோல் வாக்குமூலம் எதிரிகளிடம் இருந்து பெறப்படவில்லை என்றும், அதன் மூலம் பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும், காவல் துறையினர் சொல்லிக்கொடுத்து, காவல் துறையினர் சொன்னதன் அடிப்படையில் வாக்குமூலம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**முடித்த நேரம் 5.33 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

<u>**Spl.S.C.No.**11/2023 **PW** 29 – முத்துசாமி 23.07.2025</u>

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

<u>**M.P.**1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

<u>ஆரம்பித்த நேரம் 5.33 மணி</u>

மருத்துவமனையில் இருந்து பெறப்பட்ட தகவல் எழுத்துமூலமாக பெறப்பட்டதா என்றால் புறக்காவல் நிலையத்திலிருந்து போன் மூலம் தகவல் பெறப்பட்டது. நீங்கள் தகவல் கிடைத்துமருத்துவமனைக்கு சென்றதற்கு ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல, காவல் நிலையத்தில் மருத்துவமனை பதிவேடு உள்ளது. பதிவேடு இருந்தால் அதற்கு பெட்டிசன் Enquiry என்று ஒரு ஆவணம் தயார் செய்யவேண்டும் என்று சொன்னால் அதைப்பற்றி தெரியாது. பதிவேடு தவிர வேறு எந்த ஆவணமும் தகவல் பெற்றதற்கான இந்த வழக்கில் எந்தவொரு ஆவணமும் இல்லை என்று சொன்னால் மருத்துவமனையில் விபத்து பதிவேடு உள்ளது. விபத்து பதிவேடு நகல் அடிப்படையில் நிங்கள் என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியும். நான் தகவல் கிடைத்தவுடன் மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன், மருத்துவமனையில் இல்லாததால் மேல் அதிகாரிக்கு தகவல் கொடுத்து பொது நாட்குறிப்பில் இது குறித்து

குறித்துள்ளேன். மேல் அதிகாரிகளுக்கு வாய்மொழியாக தகவல் கூறினேன். பொது நாட்குறிப்பு குறித்த ஆவணம் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் அது புலன் விசாரணை அதிகாரிக்குதான் தெரியும். நீங்கள் தனி அறிக்கை கொடுத்தீர்களா என்றால் இல்லை. நீங்கள் கூறுவதுபோல் அவர் காணாமல் போகவில்லை, அவர் புகார் கொடுத்தார், அந்த புகாரின்மீது நடவடிக்கையும் எடுக்கப்பட்டது, இந்த கொலை வழக்கு ஏற்பட்டுவிட்டதால் அந்த புகாரின் ஆவணங்கள் மறைக்கப்பட்டு, மருத்துவ ஆவணங்களும் திருத்தப்பட்டு இந்த வழக்கு ஜோடிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**முடித்த நேரம் 5.39 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**<u>Spl.S.C.No.11/2023 PW 30 – முருகேசன் 23.07.2025</u>**

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**<u>M.P.1/2025ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**<u>ஆரம்பித்த நேரம் 5.39 மணி</u>**

கணிணியில்தான் இந்த தகவல் பெறப்பட்டது என்று சொன்னால் Call Details கணிணியில்தான் பெறப்பட்டது. கணிணியில் உள்ள தகவல்களை நீங்கள் பேப்பரில் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நீங்கள் கூறுவதுபோல் எந்த பதிவும் எடுக்கப்படவில்லை என்றும், அந்த பதிவுகள் வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

**<u>முடித்த நேரம் 5.40 மணி</u>**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**Spl.S.C.No**.11/2023 **PW** 31 – ரவிக்குமார் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P**.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆரம்பித்த நேரம் 5.40 மணி

நீங்கள் இந்த வழக்கு வேலைகளுக்கு எல்லாம் பாஸ்போட் வாங்கிதான் சென்றேன். நீங்கள் வேலை முடிந்தவுடன் அந்த பாஸ்போட்டை புலன் விசாரணை அதிகாரியிடம் ஒப்படைத்துவிட்டீர்களா என்றால் ஒப்படைத்துவிட்டேன். காவல்நிலையத்திற்கும், நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 7-8 கி.மீ., இருக்கும். அன்று நான் பேரூந்தில்தான் நீதிமன்றத்திற்கு சென்றேன். இதுகுறித்து ஆய்வாளர் விசாரிததாரா என்றால் விசாரித்தார். வண்டி பஞ்சர் ஆகிவிட்டது ஆகையால் பேரூந்தில் சென்ற விபரத்தை கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். நீங்கள் சொன்னவாறு எந்த வேலையும் செய்யப்படவில்லை என்றும், இந்த வழக்கிற்கு உங்களை சாட்சியாக போட்டு ஆவணம் தயார் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

முடித்த நேரம் 5.43 மணி

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.

**Spl.S.C.No.**11/2023 **PW** 34 – காளிதாசன் 23.07.2025

(எதிரி ஆஜர்படுத்தப்பட்டார்)

**M.P.1/2025 ல் 14.07.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆரம்பித்த நேரம் 5.43 மணி**

CDR மற்றும் CAF ஆகியவற்றை உங்கள் கணிணியில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டு பிரிண்ட் எடுக்கப்பட்டதா என்றால் இல்லை. அ.த.சா.ஆ.56 மற்றும் அ.த.சா.ஆ.57 ஆவணங்களுக்கு 65 B சான்றிதழ் வழங்கவில்லை. அ.த.சா.ஆ.56 மற்றும் அ.த.சா.ஆ.57 வழக்கிற்கு பின்னிட்டு தயார் செய்தது என்றும், அதுசட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**முடித்த நேரம் 5.47 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.